# தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

## C.S.I. TAMIL PARISH AL AIN, UAE




**கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?**

**உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.**

**-சங்கீதம்:*15:1,2***

**Lord, who shall sojourn in your tent? Who shall dwell on your holy hill?**

**He who walks blamelessly and does what is right and speaks truth in his heart.**

**Psalm:15:1,2**

JUNE '2022

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| SAT<br>5.00 PM<br>6.30 PM | CHILDREN'S BIBLE SCHOOL<br>GENERAL ASSEMBLY & BIBLE CLASSES<br>MRS. AUGUSTA LAWRENCE @ 056 641 1676 |
| WED<br>7.30 PM | BIBLE STUDY<br>EVERY WEDNESDAY<br>CONTACT: THE PRESBYTER |
| SAT<br>7.45 PM<br>9.30 PM | 1 ST & 3 RD WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 4TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |

# FROM THE PASTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**இயேசு.... யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்.**

**— யோவான்:21:15**

**JESUS SAID TO SIMON PETER, "SIMON,SON OF JOHN, DO YOU LOVE ME MORE THAN THESE?**

**- JOHN:21:15**

யோவான் 21-ஆம் அதிகாரம் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு திபேரியா கடற்கரையில் சீஷர்களுக்கு தரிசனமானார். அப்பொழுது சீமோன் பேதுருவுடன் ஒரு உரையாடல் செய்தார். அந்த உரையாடலின் இயேசு தான் யார் என்பதை எடுத்துக் காண்பிக்கின்றார்.

- அரவணைக்கும் ஆண்டவராக
- அன்பு காட்டும் ஆண்டவராக
- ஆயத்தப் படுத்தும் ஆண்டவராக

இந்த உரையாடல் பேதுருவின் வாழ்வில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வந்தது.

இன்றைக்கு நம்முடைய வாழ்விலும் ஒரு புதிய மாற்றத்தை பெற்றுக்கொள்ள நம்மை ஒப்புக்கொடுக்க அழைக்கப்படுகிறோம்.

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கின்றேன். தொடர்ந்து இந்தகாலக்கட்டத்தில் இந்த தேசத்தில் நம்மை பாதுகாத்து வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்து அநேகர் இந்த காலகட்டத்தில் வேலைவாய்ப்புகள் இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

தொடர்ந்து நமது திருச்சபையில் ZOOM வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக, அவர்களின் உயர் கல்விக்காக அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்

Rev. S. P. Baskar




**கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?**
**உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.**

**-சங்கீதம்:15:1,2**

**O,LORD, WHO SHALL SOJOURN IN YOUR TENT? WHO SHALL DWELL ON YOUR HOLY HILL?**
**HE WHO WALKS BLAMELESSLY AND DOES WHAT IS RIGHT AND SPEAKS TRUTH IN HIS HEART.**

**-PSALM:15:1,2**

இந்த சங்கீதம் "தோழா திருவழிபாடு - நுழைவுத் தோழா" என்று அழைக்கப்படுகிறது. இந்த சங்கீதம் வழிபாட்டில் (அ) ஆராதனையில் ஆண்டவரிடம் (அ) அவருடைய திருப்பணியாளரிடம் கேள்வி கேட்டுப்பதில் வாங்கும் "வினா-விடை" மரபில் சார்ந்தவை ஆகும். இதில் ஆண்டவரது ஆலயத்தில் (அ) இல்லத்தில் வழிபாடு செய்வதற்குவேண்டிய தகுதிகள் பற்றி கூறுகிறது. இந்தப் பாடல் எருசலேம் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்ட பின்பு பாடப்பட்ட சங்கீதம் ஆகும். இதில் கட்டப்பட்ட கோயிலினால் தான் சீயோன் மலையும் புனிததிருமலை என அழைக்கப்படுகின்றது.

சங்கீதம் 14-ஆம் பாடலுக்கும் சங்கீதம் 15-ஆம் பாடலுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. சங்கீதம் 14-இல் ஆண்டவரை அறிவது என்பது பிறருக்கு அன்பு செய்வது, நீதி வழங்குவது என்று சொல்லப்படுகிறது. சங்கீதம் 15-இல் ஆண்டவரின் இல்லத்திற்குச் சென்று அவரை வழிபட வேண்டுமாயின், பிறரை அன்பு செய்ய வேண்டும் என்று கூறப்படுகிறது. எனவே இரண்டு சங்கீதமும் ஒரே சிந்தனையுடன் சொல்லப்பட்டவை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த சங்கீதம் நமக்கு கொடுக்கும் அறைகூவல் என்னவெனில் சிந்தனை, சொல், செயல் என்பது கொள்கையில் மட்டும் இல்லாமல் வாழ்வின் செயலிலும் காட்ட வேண்டும்.அப்பொழுதுதான் ஆண்டவரின் கூடாரத்தில் தங்கி ஆண்டவரை வழிபட முடியும் என்பதையும் அதற்கு தகுதியுடையவராய் இருக்க முடியும் என்பதை எடுத்துக் காண்பிக்கின்றது.

### Psalm:15

*This hymn Celebrates the ideal worshiper of the Lord. The singers do not claim to have achieved these character qualities. They simply yearn to have them more and more.*

## ஆண்டவரின் இல்லத்தில் சென்று வழிபடத் தகுதியுள்ளவர் யார்?

#### சங்கீதம்:15:1 - கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்?

கூடாரம் என்பது சீயோன் மலையில் உள்ள திருக்கோயில் ஆகும். இதுவே ஆண்டவரின் இல்லம் ஆகும். இங்கு "தங்கிட-குடியிருக்க"என்பது ஜெபிக்க, ஆண்டவரை வழிபட, ஆண்டவருக்கு பலிசெலுத்த, ஆண்டவருடன் தங்கி வாழ, ஆண்டவருடன் உடனிருக்க என்று பொருள் கொடுக்கப்படுகிறது. இது நிலையான வாழ்விற்கான இடத்தை குறிப்பதாகும்.

#### சங்கீதம்:15:2,3 - உத்தமனாய் நடந்து(மாசற்றவர்)

இது ஆண்டவரின் திரு சட்டப்படி நடப்போர், சிந்தனை, சொல், செயலில் மாசற்ற வராய், உத்தமனாய் நடப்போரைக் குறித்து சொல்லப்படுபவை ஆகும்.

- சிந்தனையில் இழிவாக கருதுபவர் உயர்வாக மதிப்பவர்
- சொல்லில் உண்மை பேசுபவர் புறம் கூற மாட்டார், பழி சொல்ல மாட்டார், ஆண்டவரின் வாக்கை மீற மாட்டார்
- செயலில் காண்பவர் தீங்கு செய்ய மாட்டார், ஏமாற்ற மாட்டார், வட்டிக்குப் பணம் கொடுக்க மாட்டார்

இத்தகையோரை தான் உத்தமர், மாசற்றவர் என்று சொல்லப்படுகிறது. அவர்கள்தான் ஆண்டவருக்குள் எப்பொழுதும் நிலைத்து இருப்பவர்கள் ஆவார்கள்.

சங்கீதம்:15:4 - ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன் (நெறிதவறி நடப்போரை இழிவாக் கருதுபவர்)

இவர்கள் பொல்லாதவர்களின் வழிமுறைகளை பின்பற்றி நடப்பவர்களை குறிக்கும். இவர்கள் பொல்லாங்கை விட்டு விலகாதவர்கள் ஆவார்கள்.

**"ஆண்டவருக்கு அஞ்சுவோர்"** இவர்கள் நல்லவர்கள், நேர்மையாய் நடப்பவர்கள், ஏழை எளியோர் மீது கரிசனை கொள்பவர்கள் ஆவார்கள்.

சங்கீதம்:15:5- பணத்தை வட்டிக்குக் கொடார்

மத்திய கிழக்கு நாடுகளில் நூற்றுக்கு 33 விழுக்காடு முதல் 50 விழுக்காடு வரை வட்டி வாங்குவது மரபாயிருந்தது. புறவினத்தாரிடம் இஸ்ரயேலர் வட்டிக்கு பணம் கொடுக்கலாம் என்ற சட்டம் இருந்தது.(லேவி:25:35-37, உபா: 23:20) ஆனால் தன் மக்களிடையே, குறிப்பாக ஏழை இஸ்ரயேலரிடத்தில் இவ்வாறு வட்டி வாங்குவது தவறு என்ற சட்டமும் இருந்தது. (யாத்:22:25, உபா:23:19, லேவி:25:26) எனவேதான் வட்டிக்கு பணம் கொடுக்காமல் இருப்பவன் ஆண்டவரின் கூடாரத்தில் தங்கி இருப்பான் என்று சொல்லப்படுகிறது.

நிறைவாக

ஆண்டவரின் கூடாரத்தில் தங்கி இருப்பவன்யார்? குடியிருப்போர் யார்? என்ற வினாவிற்கு விடை இங்கு புரிந்துக் கொள்ள முடிகிறது. உத்தமனாய் நடந்து, ஆண்டவருக்கு பயந்து, பிறருக்கு தீங்கு செய்யாமல் இருப்பவனே, என்ற பதிலை நாம் புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். அப்படி வாழ்வதற்கு நம்மை ஆண்டவரிடம் அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உண்ணத பணியில்.....

Rev.S.P.Baskar



# பத்சேபாள்

மத்தேயு: *1:6*

## முன்னுரை

**ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றான். தாவீது ராஜா உரியாவின் மனைவியாயிருந்தவளிடத்தில் சாலொமோனைப் பெற்றான்.**

**—மத்தேயு:1:6**

**AND JESSE THE FATHER OF DAVID THE KING, AND DAVID WAS THE FATHER OF SOLOMON BY THE WIFE OF URIAH.**

**- MATTHEW:1:6**

பத்சேபாள் கடவுளின் கருவி எனப் பெயர் பெற்றவர். கானானிய வழிமரபினர், கருணைக் குரியவர், தாவீதுக்கு ஐந்து குழந்தைகளைப் பெற்றுக் கொடுத்தவர், தம்முடைய முதல் கணவர் உரியாவை தாவீது கொன்றுவிட அரசனுக்கு அன்புக்குரிய மனைவியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றார். சாலமோனின் தாயென்று புரிந்து கொள்ளப் பட்டாலும் உரியாவின் மனைவியாகவே அறிமுகப்படுத்தப் படுகின்றார்.

## ஆண்டவரின் கருணையைப் பெற்ற பண்புள்ள தாய் பத்சேபாள்

தம் முதல் மகவை இழந்த பத்சேபாள் தன்னுடைய அமைதியான பண்பும், மேன்மையான மாண்பு, அரசிக்குரிய ஊக்கம் இவை அனைத்தும் கடவுளின் பார்வையில் பத்சேபாவிற்கு கருணையால் கிடைப்பவை ஆகும். இதனால் இயேசு கிறிஸ்துவின் தலைமுறைப் பட்டியலில் இவர் பெயர் இடம்பெறுவதற்கான வாய்ப்பு உருவாகியது. இவை அனைத்தும் பத்சேபாளின் நல்ல பண்புள்ள தாய் என்பதை ஆண்டவரின் கருணையினால் அடையாளப்படுத்தப்படுகிறது.

## ஆண்டவரின் மீட்பின் வரலாற்றுப் பணியில் பத்சேபாள்

உலக மீட்பர் அனைவருக்குறியவர் என்பதே பத்சேபாளின் வாழ்வே சாட்சி ஆகும். இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்திலும், அதற்கு முன்பு இருந்த காலத்திலும் பெண்களுக்கு மதிப்பு இருந்ததாக கருதப்படவில்லை, ஆனால் தாய்மை என்பது மதிக்கப்பட வேண்டும் என்பதற்கும் பெண்கள் பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்பதற்கும் பத்சேபாள் ஒரு சான்றாக திகழ்ந்தார்.

அரசியாக தன்னுடைய பொறுப்பில் செயல்பட்டார், இவரைப் போன்ற பெண்கள் இயேசுவின் தலைமுறை பட்டியலில் இடம் பெறுவது என்பது ஆண்டவர் தம் மீட்பின் வரலாற்றில் பத்சேபாள் பயன்படுத்தப்பட்டாவர் என்பதை அடையாளப்படுத்துகிறது. தனக்கு பிடித்திருக்கிறது என்கின்ற ஒரே காரணத்திற்காக பத்சேபாளின் அழகை தம்முடையமையாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் உரிமையைத் தாமே கையிலெடுத்துக்கொண்ட தாவீதின் செயல்பாடு தவறானதாக இருந்தாலும் பத்சேபாள் அதை தவறாக பயன்படுத்திக் கொள்ளாமல் ஆண்டவரின் மீட்பின் வரலாற்றுக்கு தன்னை அர்ப்பணித்தார் என்பது அவரின் வாழ்வின் மூலம் காண்பித்தார்.




## முடிவுரை

இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலைகளில் ஆண்டவர் நம்மையும் அழைத்து தெரிந்துக் கொள்ளும்போது இன்றைக்கு நாமும் ஆண்டவருக்குள் நல்ல பண்புகளைப் பெற்று ஆண்டவரின் மீட்பின் பணியில் நம்மை இணைத்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக...

இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா.

Mrs.E.Nancy Baskar.

# எலியாவும் ஏழை விதவையும்



## முன்னுரை

எலியா என்பவர் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆகாப் அரசன் காலத்தில் தென் இஸ்ரேலில் வாழ்ந்த புகழ்பெற்ற தீர்க்கதரிசியும் அற்புதம் செய்பவரும் ஆவார்.

**விளக்கம்:** விசுவாசம் அற்புதத்தின் ஆரம்பம்

கர்த்தர் எலியாவை சாறிபாத் ஊருக்கு போய் அங்கே தங்கியிரு, உன்னை பராமரிக்கும் படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்கு கட்டளையிட்டேன் என்றார் (1 இராஜாக்கள் 17:9) அவன் அவளை நோக்கி குடிக்கக்கொஞ்சம் தண்ணீரும் கூட கொஞ்சம் அப்பமும் கொண்டுவா என்றான். அதற்கு அவள் பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் அல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லை என்று சொன்னாள்.

அதற்கு எலியா: பயப்படாதேநீ போய் உன் வார்த்தையின் படியே ஆயத்தப்படுத்து, ஆனாலும் முதலில் அதில் எனக்கு ஒரு சிறிய அடையை பண்ணி என்னிடத்தில் கொண்டுவா, பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம் என்றான்.

அவள் போய் எலியாவின்சொற்படி செய்தாள். அவளும் இவனும் அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவை கொண்டு சொன்ன வார்த்தையின் படியே பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை, கலயத்தில் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை.

## முடிவுரை

இன்றைய சூழ்நிலையில் நாமும் சிந்திப்போம். அந்த ஏழை அந்நாளில் விசுவாசிக்காமல் எலியாவின் வார்த்தையை ஏற்காமல் இருந்திருந்தால் அற்புதத்தை அந்த விதவை பெற்றிருக்க முடியாது. எலியாவின் வார்த்தையை ஏற்று, கர்த்தர் பேரில் வைத்த விசுவாசத்தினால் முதலில் சிறிய ஆடையை எலியாவுக்கு கொடுத்ததால் அற்புதம் பெற்றாள். நாமும் இந்த நாட்களில் நம்மில் இருப்பதில் முதன்மையானதை தேவனுக்கு கொடுத்து விசுவாசிப்போம், பெரிதான காரியங்களை நம் தேவன் நமக்கு நடத்தித் தருவார்.

விசுவாசித்து தேவனுக்கு கொடுப்போம் ! அற்புதம் பெறுவோம் !

**கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக**

*ARTICLE BY*

**SIS. BANUPRIYA ARUNKUMAR**


WOMEN'S Fellowship



# சொன்ன வார்த்தையின்படியே

**"கர்த்தர் எலியாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை"**

***(1இராஜாக்கள் 17:16)***



*இந்த உலகத்தில் மாறாத ஒன்று கர்த்தருடைய வார்த்தை மாத்திரமே. மற்றவைகள் எல்லாம் தவறிப்போய் விடும். நாம் தேவனுடைய வார்த்தையைப் பற்றிக்கொண்டு வாழுவதிலும், அனுதினமும் நம்முடைய வாழ்க்கையில் கர்த்தரைப் பின்பற்றுவதிலும் ஒருக்காலும் தளர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய வார்த்தையைப் பற்றிக்கொண்டு ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம் என்றால், அது மிகச் சிறந்தது. என்ன ஒரு ஆச்சரியமான விதத்தில் தேவன் இந்த விதவையையும் அவள் குடும்பத்தையும் போஷித்தார்!. தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. நம்முடைய ஆத்துமாவைப் போஷிக்க வல்லமையுள்ளது. தேவனுடைய வார்த்தை நம்முடைய வாழ்க்கையில் வரும்பொழுது நாம் ஒருக்காலும் குறைவுபட மாட்டோம். அவருடைய வார்த்தையைப் பின்பற்றுவதில் நாம் தவறுவதினால் நாம் நம்முடைய வாழ்க்கையில் அநேக காரியங்களில் குறைவுபட்டுப் போகிறோம். ஆனால் தேவனுடைய வார்த்தை ஒருபோதும்*

*மாறாது. எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே தேவன் முழுமையாக அதை நிறைவேற்றினார். தேவனுடைய மாறாத தன்மையை நாம் இங்கு பார்க்கிறோம்.*

***தேவனைச் சார்ந்து வாழும்பொழுது அந்தந்த நாளுக்குரிய காரியங்களை அவர் நமக்குக் கொடுத்து நம்மைப் போஷித்து நம்மை வழிநடத்துவார் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.***

YOUTH FELLOWSHIP




# பாழாய்க்கிடந்தவைகளைக் கட்டி

*ஏசாயா; 61 :4*

**அவர்கள் நெடுங்காலம் பாழாய்க்கிடந்தவைகளைக் கட்டி பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து தலைமுறை தலைமுறையாய் இடிந்துகிடந்த பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள்.**

ஏசாயா: *61 :4*

அருமையானவர்களே இந்த நாட்களில் ஆவிக்குரிய நிலைகள் விழுந்துபோனதாகக் காணப்படுகிறது. இது மிக வேதனையான ஒன்றாகக் காணப்படுகிறது, ஆனால் ஆண்டவர் சொல்லுகிறார், நான் திரும்ப எடுப்பித்து அவர் நெடுநாளாய் பாழாய்க் கிடந்த பட்டனங்களை திரும்ப எழுப்பிகட்டுவார் நம்முடைய வாழ்க்கையில் கூட அநேக முறை நாம் தவறிவிழுந்து இருப்போம் நம்முடைய வாழ்க்கையில் பாழாய் போனதாய் இருந்தாலும் கர்த்தர் நம்மை திரும்ப எடுத்து புதிதாய் கட்டுவார்.




அருமையானவர்களே இந்த நாட்களில் ஆவிக்குரிய நிலைகள் விழுந்துபோனதாகக் காணப்படுஅதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று, நம்முடைய வாழ்க்கையிலும் நாம் கொண்டிருந்த ஆதி அன்பை இழந்திருப்போமென்றால் நாம் மறுபடியுமாக அந்த ஆதி அன்பிற்குத் திரும்புவோம். தேவனுடைய கிருபையினால் அவருக்காக வாழவும் உழைக்கவும் நாம் மறுபடியுமாக கட்டப்படவும்

கட்டப்படவும் தேவன் நமக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டும் என்று எதிர்ப்பார்போம். பூர்வ நாட்களில் கொண்டிருந்த ஆவிக்குரிய தாகத்தை நாம் மறுபடியுமாக புதுப்பித்த நிலையினைப் பெற்றவர்களாகக் கர்த்தருக்கென்று வைராக்கிய வாஞ்சை கொண்டவர்களாய் வாழ அவர் நமக்கு இரக்கம் செய்வாராக.

### நான் திரும்ப எடுப்பித்து


"அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்"

(ஆமோஸ் 9:12)

ஆண்டவரே விழுந்துப்போன நிலையை எங்களுக்கு மன்னித்து, எங்களைத் திருப்பிக்கொள்ளும். அப்பொழுது நாங்கள் திரும்புவோம், உம்மோடு கொண்டிருக்கிற உறவை புதுப்பியும், இந்த உலகத்திற்கு நாங்கள் உம்மை வெளிப்படுத்த வேண்டிய மகாப் பெரிய உத்திரவாதத்தை நிறைவேற்ற எங்களுக்குக் கிருபை செய்தருளும் என்று ஜெபிப்போம்

அசோக்குமார் சா

MEN'S FELLOWSHIP



மாறாது. எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே தேவன் முழுமையாக அதை நிறைவேற்றினார். தேவனுடைய மாறாத தன்மையை நாம் இங்கு பார்க்கிறோம்.

### இழந்து போனதை தேடவும் இரடசிக்கவும்:

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். (1தீமோ 1:15 & லூக்கா19:10)

### ஊழியம் செய்யவும் ஜீவனைக் கொடுக்கவும்:

அப்படியே, மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவும், அனேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற்கு 10:45).

### மரித்தோரை உயிரோடு எழுப்பவும்:

மனுஷனால் மரணம் உண்டானபடியால்இ மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று (1கொரி 15:21).

### பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும் படியாகவும்:

ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் (1யோவான் 3:8).

### பாவிகளை மனந்திரும்புவதற்கு அழைக்கவும்:

பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமள்ளவர்களுக்கு வேண்டியதில்லை நீதிமான்களையல்லஇ பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார் (மாற்கு 2:17).

**தேவனுடைய சித்தத்தை செய்து முடிக்கும் படியாகவும்:**

என் சித்தத்தின் படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன் (யோவான் 6:38).

**நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவும்:**

நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் (மத்தேயு 5:17).

**உலகத்தை நியாயத்தீர்ப்பு செய்யவும்:**

காணாதவர்கள் காணும்படியாகவம் காண்கிறவர்கள் குருடராகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார் (யோவான் 9:39).

**தேவனுடைய அன்பை வெளிப்படுத்தவும்:**

நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1யோவான் 4:10).

**தேவனுடைய சுவிசேஷத்ததை அறிவிக்கவும்:**

நான் பிரசங்கம் பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே பறப்பட்டு வந்தேன் (மாற்கு 1:38).

**பரிசுத்த ஆவியானவர் நம்மோடு வாசம் பண்ணவும்:**

நான் பிதாவை வேண்டிக்கோள்வேன் அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும் படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோவான் 14:16).

**சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்கவும்:**

சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்இ இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்யவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.
(யோவான் 18:37).

## உலகத்தின் ஒளியாகவும்:

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன் (யோவான 4:6).

## புத்திர சுவிகாரத்தை அடையும் படியாகவும்:

நாம் புத்திர சுவிகாரத்தை அடையும் படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத் தக்கதாக, காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:4,5).

## பிதாவை காண்பிக்கவும்:

என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்? (யோவான் 14:9)

ஆம் உடன் விசுவாசிகளே! மேற் காணும் வசனங்கள் கிறிஸ்து எதற்காக உலகத்தில் வந்தார் அல்லது தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை உலகத்திற்கு எதற்காக அனுப்பினார் என்பதை திட்டமாய் போதிக்கின்றது. இந்த போதனைகளை அறிந்திருக்கிற நாம் சற்று பின்னோக்கிப் பார்த்து நாம் தேவனுக்காக என்ன செய்தோம் அல்லது என்ன செய்ய போகிறோம் என சிந்தித்துப்பார்போம். உண்மையான சிந்தனைகள் செயல்பாடுகள் நாம் ஆசரிக்கிற இந்த கிறிஸ்து பிறப்பின் பண்டிகை நம் ஒவ்வொருவர்க்கும் அர்த்தமுள்ளதாக அமையச் செய்யும்.

*ARTICLE BY*

M.NESAMONY & FAMILY





# தேவன் உபயோகித்த பாத்திரங்கள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே !!

தேவன் தம்முடைய பணியை செய்யும் வண்ணமாக அநேகரைத் தெரிந்தெடுத்து உலகின் பல பகுதிகளுககும் அனுப்பினார். அந்த வண்ணமாக தெரிந்து கொள்ளப்பட்டு நம்முடைய தேசத்திற்கு அவரால் அனுப்பப்பட்ட சில தேவ பிள்ளைகளின் வாழ்வை குறித்ததான சில காரியங்களை, செய்திகளை இந்த பகுதியிலே பகிர விழைகிறேன். நம்மில் அநேகர் இவர்களைக் குறித்து அறிந்திருககலாம், இருப்பினும் தேவனால் அனுப்பப்பட்ட பிள்ளைகள் அனுப்பினவருடைய பணியை எவ்வண்ணமாக செய்து முடித்தார்கள் என்பதை ஒருமுறை கூட நம் நினைவிற்கு கொண்டு வருவது நம்முடைய அனுதின கிறிஸ்தவ வாழவிற்கு பயனுள்ளதாக, ஆசீர்வாதமாக அமையும் என எண்ணுகிறேன்.

## மரியா உட்வொர்த் எற்றார்


**(MARIA WOODWORTH ETTER)**

அமெரிக்காவில் ஒகியாவிலிலுள்ள லிஸ்பனில் (LISBON, OHIO) ஒரு பண்ணையில் 1844-ஆம் ஆண்டு பிறந்தார் மரியா. இளம் வயதிலேயே தன் தந்தையை இழந்ததினால் அவருடைய கல்விபாதிககப்பட்டது. இவரது 13-ஆம் வயதிலேயே கிறிஸ்துவில் இவர் கொண்டருந்த ஈர்ப்பைப் பார்த்த, இவரை வழிநடத்திய போதகர்கள் இவரது வாழ்வு அனேகருக்கு ஆசீர்வாதமாக அமையும் என தீர்க்கத்தரிசனமாக கூறினர். மரியாவும் அவரது வாழ்வின் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவோடு நெருங்கி வாழ்வதோடு மட்டுமல்லாது அவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற உத்வேகத்தோடு வாழத் தொடங்கினார். கிறிஸ்துவுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு ஒரு மிஷனரியைத் திருமணம் செய்ய தீர்மானித்திர்ந்தார்.



**திருமண வாழ்வும் ஊழியமும் :** PH உட்வொர்த (PH WOODWORTH) என்னும் முன்னாள் ராணுவவீரர் ஒருவரை திருமணம் செய்தார் மரியா. அவரோ ஊழியத்தில் கொஞ்சமும் விருப்பம் இல்லாதவர் மேலும், மரியாவின் ஊழியத்தை அவதூறாக பேசுபவராக காணப்பட்டார். மரியா ஆறு பிள்ளைகட்கு தாயானார், அதில் ஐந்து பேர் வியாதியில் மரித்தார்கள். மீதமுள்ள தனது ஒரே மகளை பேணி வளர்த்தும், தனது கணவருக்கு இயன்ற அளவில் உதவிகள் செய்தும் வாழ்ந்து வந்தார். இந்த சூழ் நிலைகட்காக ஒரு போதும் தேவனை நொந்து கொள்ளவில்லை, மனம் சோர்ந்து போகவில்லை.

தேவனடைய வார்த்தையை தேட ஆரம்பித்தார். வேதத்தில் பெண்கள் எவ்வாறு பயன்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு வியந்தார். ‘‘மாமிசமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன"; என்ற வார்த்தையின் மேல் விசுவாசம் வைத்து செயல்பட ஆரம்பித்தார். தேவ வல்லமையினால் அபிஷேகம் செய்யப்பட்டார்.




பெண்கள் ஊழியம் செய்வதை அனுமதிக்க அந்த நாட்களில் மரியா, முதலாவது தனது சொந்த சமூகத்தில் உள்ள மக்கள் மத்தியில் ஊழியத்தை ஆரம்பித்தார். அவரது முதல் கூட்டத்தில் பேசும் போதே அனேக மக்கள் தங்கள் பாவங்களை உணர்ந்தவர்களாக புலம்பிக் கொண்டிருந்ததைக் கண்டு தேவனுகசு; நன்றி செலுத்தினார். மேலும் அவர்கள் மத்தியில் *9* எழுப்புதல் கூட்டங்கள் நடத்தி *200*க்கும் மேற்பட்ட பிரசங்கங்களை செய்தார். இரண்டு திருச்சபைகளை நிறுவி அதில் *100* பேரை அங்கத்தினர்களுமாக்கினார்.

மனந்திரும்புதலும் குணமடைதலும் : மிக இலகுவான செய்திகளையே தன்னுடைய நற்செய்தி கூட்டங்களில் பிரசங்கித்து வந்தார் மரியா. கண்களில் கண்ணீர் வடிய பிரசங்கம் செய்தார். செய்தியைக் கேட்டவர்கள் கிறிஸ்துவிடம் வரவேண்டுமென கெஞ்சுவார். அவரின் கூட்டங்களில் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், குடிகாரர்கள், விபச்சாரிகள் மற்றும் பலதரப்பட்ட மகக்ள் உற்சாகத்தோடு கலந்து கொண்டு மகிமையாய் இரட்சிகக்ப்பட்டு, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர். ஒரு காவல்துறை அதிகாரி, ‘‘தங்கள் நகரத்தில் மக்கள் வாழ்க்கையில் இது போன்ற மாற்றத்தைத் தான் ஒரு போதும் கண்டதில்லை’’ என்று சாட்சி பகர்ந்தாராம்.

தொடரும்................

# Junior -A- Article



**Aaliya B. Babina**



**Abigail Christine**

**Johan Sanjo**




Teacher : Mrs. Augusta Lawrence

# MAY

## Congratulations

| KIDS COLOURING | CODE WORD | WORD SEARCH | CROSS WORD | BIBLE QUIZ |
|---|---|---|---|---|
| Smyrna Syntche | Jania Preni | Sherin Shah | Roshan | Roshan |
| Jania Preni | Johan Sanjo | Johan Sanjo | Johan Sanjo | |
| Johan Sanjo | Hazel Hartlyn | Roshan | Sherin Shah | |
| Hazel Hartlyn | Kariss Angelo | Eric Aaron | Eric Aaron | |
| Reagan Shan | Sherin Shah | Jason Eric | | |
| Kariss Angelo | Jason Eric | | | |
| Chris Gabiriel | | | | |

Well Done!

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**To Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


# 1,2,3 John

## 1,2,3 யோவான்



JUNE '22 - QUESTIONS

1. நாம் பாவம் செய்யவில்லை என்றால் ஆண்டவரை எப்படி காண்பிக்கிறோம்?
2. யார் இருளிலே இருக்கின்றான்?
3. யாரிடத்தில் பிதாவின் அன்பு இல்லை?
4. பிதாவையும், குமாரனையும் மறுதலிக்கிறவன் ----------------------
5. எது பாவம்?
6. எதினால் அன்பு கூறவேண்டும்?
7. தேவனை அறியாதவன் யார்?
8. யார் ஜீவன் இல்லாதவன்?
9. யாருக்கு வாழ்த்து சொல்லாமல் இருக்க வேண்டும்?
10. யார் நற்சாட்சி பெற்றவர்?




### மே-2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. யாக்:1:26 | 2. யாக்: 3:8 | 3. யாக்: 4:7 | 4. யாக்: 5:20 | 5. 1. பேதுரு: 1:23 | 6. 1 பேதுரு: 2:3 | 7. 1 பேதுரு: 3:17 | 8. 1 பேதுரு: 5:13 | 9. 2 பேதுரு: 1:10 | 10. 2 பேதுரு: 2:22

திருமதி. ஜோனிஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஹெலன் கம்பீரம் திருமதி.ஜமுனா ராணி, திருமதி. பமீலா டேனியல், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.


மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348

*Heaven and earth shall pass away: but my Words shall not pass away.*

*~ Mark 13:31*



# PRIMARY



# THE CREATION



Discover the hidden words.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| M | R | G | O | D | Q | H | D | Z | E | P | O | V | C | A |
| C | A | W | C | H | E | P | Y | Y | Z | C | R | C | L | N |
| L | T | N | L | G | B | T | I | U | R | F | P | K | A | I |
| A | I | H | M | I | H | E | O | O | N | T | F | J | Y | M |
| Y | O | U | Q | E | M | E | J | U | E | H | I | L | R | A |
| B | N | E | E | E | W | A | Q | E | R | R | V | J | B | L |
| D | V | N | V | Q | I | R | G | B | Q | E | E | Y | B | S |
| R | I | B | F | X | X | T | D | E | V | A | S | L | X | Q |
| N | N | S | E | V | E | N | T | H | N | T | T | C | Z | S |
| E | V | L | E | W | T | E | T | K | U | I | O | X | O | I |
| D | S | T | I | N | N | N | D | Y | D | W | F | Q | J | K |
| D | K | L | G | Q | F | M | W | E | A | V | C | R | S | O |
| J | Q | V | M | F | P | V | B | A | N | H | T | F | V | U |
| Q | G | S | P | I | H | K | Z | W | B | Q | I | C | O | O |
| R | E | S | T | X | I | O | B | R | U | F | G | D | A | Y |

**Word Bank**

| | | |
|---|---|---|
| GOD | RIB | EAT |
| MAN | SEVENTH | FRUIT |
| IMAGE | DAY | EDEN |
| CLAY | ANIMALS | REST |







# Genesis

## Bible Word Search

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q | U | K | N | L | T | S | B | E | N | J | A | M | I | N |
| M | R | M | R | E | N | B | E | G | I | N | N | I | N | G |
| N | O | I | T | A | E | R | C | V | F | A | M | I | N | E |
| J | B | S | N | R | P | C | O | V | E | N | A | N | T | N |
| S | R | A | T | S | R | R | G | L | E | N | J | D | F | A |
| O | O | A | W | I | E | G | Y | P | T | V | D | H | K | M |
| N | T | C | L | R | S | S | X | I | P | M | E | A | U | O |
| D | H | L | E | M | A | H | A | R | B | A | F | Z | Y | W |
| O | E | I | B | R | S | M | A | E | R | D | P | D | I | S |
| O | R | G | A | J | O | S | E | P | H | A | R | A | O | H |
| L | S | H | B | R | A | I | N | B | O | W | A | W | H | S |
| F | L | T | N | I | A | C | N | O | O | M | A | B | F | I |
| N | A | M | T | R | E | E | O | F | L | I | F | E | E | N |
| G | A | R | D | E | N | O | F | E | D | E | N | A | V | L |
| S | A | B | B | A | T | H | J | A | C | O | B | E | W | T |

Bible Word Search by BiblePuzzles.com

ABEL
ABRAHAM
ADAM
ARK
BABEL
BEGINNING
BENJAMIN
BROTHERS
CAIN
COVENANT
CREATION
DREAMS
EGYPT
EVE
FAMINE
FLOOD
GARDEN OF EDEN
ISAAC
ISRAEL
JACOB
JOSEPH
LIGHT

MAN
MOON
PHARAOH
RAINBOW
SABBATH
SARAH
SERPENT
SEVEN DAYS

SIN
STARS


TREE OF LIFE
WOMAN








# SENIOR
*& above*






## ACROSS

6. Tower site
7. Wife of Isaac
8. Where Noah's ark landed 10. He killed Abel
13. City destroyed by fire
14. Biblical unit of length
15. He dreamed of a stairway to heaven
16. Abraham's firstborn son
18. Adam's and Eve's garments (2 words)
19. Son of Adam and Eve

## DOWN

1.Eden tempter
2.First murder victim
3. In the beginning God created the ___ and the ___.
4.First patriarch
5.Lot's wife became a pillar of ____
9. God's sign in the sky
11. Noah's ____
12. Oldest man in Bible
17. Father of Seth

# Happy Birthday

# June

02-JUN MRS.BABY CHRISTY MONALIZHA W/O MR.PREM JENIFER . A
03-JUN MR.D.JEYAKUMAR
05-JUN MRS.SHALINI W/O MR.RAJESH CHELLADURAI
06-JUN MASTER.JAFFRIN JERALD S/O MR.M.C.CHRISTOPHER
06-JUN MR.JOEL RANJITH KUMAR
08-JUN MR.UJIN RAJ
09-JUN MRS.ANSILIN SUGA D/O MR.YOBU
10-JUN MR.SAMAN RAJ KUMAR
10-JUN MR.CHANDRASEKAR.P
12-JUN MR.THIYAGU MURUGARAJ
16-JUN MR.ASHOK DANIEL PRABAKARAN
17-JUN MRS.ANITHA JOSE W/O MR.CELIN JOSE
22-JUN MR.MELBIN PAUL
23-JUN MR.DAVID JOHNSON PREMKUMAR
23-JUN MR.BELFER JOHN SIGAMONY
23-JUN MRS.JENNIFER W/O MR.THIYAGU MURUGARAJ
24-JUN MR.ASHOK PRASAD
26-JUN MASTER.BIDDU MOHAN S/O MR.MOHANA KUMAR.R
27-JUN MS.SHINY REBECA D/O MR.DAVID SORNABALAN
30-JUN MR.NESAMONY.M
30-JUN MRS.SINDUJA W/O MR.SATHISH KUMAR

# Happy Anniversary

01- JUN MR.JEREMIAH KINGSTON & MRS.OLIVIA SHERIN
02- JUN MR.ASHOK DANIEL PRABAKARAN & MRS.PRINCY ASHOK
06- JUN MR.ASHOK PRASAD & MRS.EBEN A.PRASAD
15- JUN MR.S.DEVA PRAKASH & MRS.SHEEBA DEVA PRAKASH
21- JUN MR.BALAJI RAMAIYAN & MRS.ROSELIN TAMIL SELVI
29- JUN MR.CELIN JOSE & MRS.ANITHA JOSE




**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**